## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

வீட்டுவசதி – தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு திட்டம் – வாடகை குடியிருப்பு கோரி பதிவு செய்தலை புதுப்பித்தல் – சில மாறுதல்கள் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீவ. 3(1) துறை**

**அரசு ஆணை (டி) எண்.334 நாள். 25.09.1998**

**அரசு குறிப்பாணை எண். 29896 / எச்இ.2 / 74–1, நாள். 27.09.1994.**

-------------

**ஆணை :**

தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு திட்டத்தின் கீழ் மனுதாரர்கள் அரசுக்குடியிருப்பு வேண்டி தங்களது பெயர்களை பதிவு செய்யும் முறை 01.11.1974 முதல் அமலுக்கு கொண்டு வரப்பட்டது. மேலும், வாடகை வீடு வேண்டி, பதிவு செய்துள்ள மனுதாரர்கள் தங்களது புதுப்பிக்கும் மனுவை ஆண்டிற்கு ஒரு முறை அரசிற்கு புதுப்பிக்கும் பொருட்டு, அனுப்பி வருகின்றனர். அதுபோல், மேம்பட்ட குடியிருப்பு வேண்டி பதிவு செய்ய மனுதாரர்கள் ஏப்ரல் / மே மாதங்களில் அரசிற்கு மனுக்களை அனுப்பி, அவைகள் பதிவு செய்யப்படுகிறது. இம்மனுதாரர்கள், ஆண்டிற்கு ஒரு முறை தங்களது பதிவை புதுப்பிக்கும் மனுவை, அரசிற்கு அனுப்பி புதுப்பித்து வரும் முறை தற்போது உள்ளது. இம்முறை தொடர்ந்து நீடிக் .

2. மேற்குறித்த பதிவு செய்தலை புதுப்பிக்கும் முறையில் கீழ்கண்ட மாறுதல்கள் கொண்டுவரப்பெறுகிறது :–

1) வாடகை வீடு ஒதுக்கீடு கோரி பதிவு செய்தவர்கள், தங்களது பதிவைப் புதுப்பிக்கும் மனுவை தத்தம் துறையின் மூலமாக தமது பெயரிலோ அல்லது மனைவி / கணவர் பெயரிலோ, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதியில் சொந்தமாக வீடு ஏதுமில்லை என்றும், மனுதாரர் சென்னை நகரில் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார் என்ற சான்றிதழ்களுடன் அரசிற்கு அனுப்பப்படவேண்டும்.
2) மனுதாரர்கள் மேம்பட்ட குடியிருப்புக்கான தங்களது பதிவினை புதுப்பிக்க விண்ணப்பம் அனுப்பும்போது மேலே பத்தி 2(1) ல் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழுடன் அரசுக்கு அனுப்பப்பட வேண்டும்.
3) மனுதாரர்கள் தங்களது மனுவைப்புதுப்பிக்க மனுதாரர்களுக்கு 30 நாட்கள் வரை கால அவகாசம் வழங்கப்படும், குறிப்பிட்ட காலத்தில் தங்கள் பதிவை புதுப்பிக்காத மனுதாரர்களின் பதிவுகள் தானாகவே காலாவதி ஆகிவிடும்.

3. மேற்குறிப்பிட்ட விதிமுறைகளை பின்பற்ற நடைமுறைக்கு கொண்டு வரப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ. பாஸ்கரதாஸ்,
அரசு செயலாளர்

பெறுநர் :

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை – 35.
அனைத்து துறை செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை – 9.
அனைத்து துறை தலைவர்கள், சென்னை.
உதிரி / இ.கோ